DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

CC. No. 74/2019

Prosecution witness – PW.4

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. நடராஜன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present)
28.02.2024 – 12.30 PM
சாட்சியை நிலைய முதல் நிலைக்காவலர்–2148 அவர்கள் அடையாளம் காட்டினார்.

முதல் விசாரணை

1. எனக்கு சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம் மறைக்குளம் கிராமம். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 யைத் தெரியும். அவர் வட்டாட்சியராக இருந்து வந்தார். அவர் தான் எங்களை மீட்டவர். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர்தான் நாங்கள் கல் அருக்கும் வேலை செய்த சேம்பரின் உரிமையாளர்.

2. எங்கள் ஊரில் கடந்த 2012ம் ஆண்டு செங்கல் சேம்பருக்கு வேலைக்கு வந்தோம். எங்கள் ஊரைச் சேர்ந்த 10 குடும்பங்கள் வேலைக்கு வந்தோம். அச்சமயத்தில் ஊரில் மழை பெய்யாததால் விவசாயம் இல்லை. எனக்குத் தெரிந்த உலக்குடி கிராமத்தைச் சேர்ந்த மேஸ்திரி ஒருவர் எங்களை அபிராமத்திலுள்ள செங்கல் சூலைக்கு வேலைக்காக அழைத்து வந்தார்.

3. சுமார் 6 மாதங்கள் வேலை பார்த்தோம். ஒவ்வொரு குடும்பத்திலும் சுமார் 3 நபர்கள் வீதம் தங்கி வேலை பார்த்தோம். தங்குவதற்கு சேம்பரில் இடம் கொடுத்தார்கள். வாரம் ஒரு முறை சம்பளம் தருவார்கள். அதைக் கொண்டு சாப்பிட்டுக் கொள்வோம். நாங்கள் வேலை செய்வதால் வரும் சம்பளத்தில் பாதியை பிடித்துக் கொண்டு மீதியைக் கொடுப்பார்கள். மீதித்தொகையை நாங்கள் ஏற்கனவே வாங்கிய முன்தொகைக்காக கழித்துக்கொள்வார்கள்.

4. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.40,000/– வீதம் முன்பணமாக கொடுத்தார்கள். பிடித்தது போக மீதமுள்ள சம்பளத்தில் குடும்பத்தை நடத்தினோம். நள்ளிரவில் 01.00 மணியளவில் கண்விழித்து இரவு பகலாக வேலை பார்த்தோம்.

5. உரிமையாளரான ஆஜர் எதிரிக்கு நாங்கள் வேலை செய்யும் நேரம் குறித்து

நன்கு தெரியும். நல்லது கெட்டது போன்ற விஷேசங்களுக்கு ஊருக்கு செல்லவேண்டும் என்றால் ஒருவர் மட்டுமே போகமுடியும். குடும்பத்தில் உள்ள மற்றவர்களை உரிமையாளர் அனுப்பமாட்டார்.

6. பின்னர் எங்களுக்கும் உரிமையாளருக்கும் சண்டை ஏற்பட்டது. வட்டாட்சியர் வந்தார்கள். எங்களிடம் சித்தரவதை குறித்து விசாரித்தார்கள். நாங்கள் நடந்த விபரத்தைச் சொன்னோம். நடவடிக்கை எடுத்தார்கள். சேம்பரை மூடிவிட்டார்கள்.

7. பின்னர் எங்களை எங்கள் ஊருக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரிலிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. சாட்சிகளின் விசாரணையை ஒத்திவைக்க மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது)

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.